இப்பொழுது விற்பனையாகின்றது
VELONA
தயாரிப்புகள் யாழ் நகரில் மொத்தமாகப் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்
'Arthe Group'
தொடர்பு கொள்க:-
ஆர்த்தி ஜுவலர்ஸ்
Pvt லிமிட்டெட்,
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

விலை: ரூ. 1-25

Now Available
All Kinds of
Velona Products
(Wholesale)
★ Banians
★ Ladies Vests
★ Panties
etc. etc.
"ARTHE GROUP"
Contact:
ARTHE JEWELLERS
Pvt Ltd.
111, Kasturiar Road,
Jaffna.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஆடி மீ 12 உ. செவ்வாய்க்கிழமை ஹிஜ்ரி 1407 ஜுல்ஹஜ் பிறை 1 (28 — 07 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 208

# அரசின் யோசனைகளை எதிர்த்து அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

## பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகம்; 100 பேர் காயம்

கொழும்பு, ஜூலை 28

இனப்பிரச்சினை சம்பந்தமாக இலங்கை அரசு முன் வைத்திருக்கும் புதிய யோசனைகளை எதிர்த்து அம்பாறையில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டக்காரரைக் கலைக்க பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர். அதன் காரணமாக சுமார் நூறு பேர் வரையில் காயமுற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஆயிரம் பேர்வரையில் கலந்துகொண்டனர்.

இவர்களில் நூற்றுக்கதிகமானோர் பௌத்த பிக்குகள் ஆவர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கற்களால் பொலீஸாரைத் தாக்கியதனால் தான் கண்ணீர்க் குண்டு பிரயோகம் மேற்கொள்ளவேண்டி ஏற்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர் என்று ''அசோசியேட்டட் பிரஸ்'' செய்தி ஸ்தாபனம் தெரிவித்தது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 32 எம்.பிக்கள் எதிர்ப்பு

கொழும்பு, ஜூலை 28

ஐ. தே. கட்சி எம்பிக்களில் 32 பேர்வரையில் இலங்கை அரசின் புதிய யோசனைகளை எதிர்ப்பதாக அறிவித்துள்ளனர்.

புதிய யோசனை சட்ட மூலமாக நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் போது அதை எதிர்த்து வாக்களிக்கும்படி சக எம்.பி.க்களைக் கேட்கப் போவதாக அமைச்சர் காமினி ஜெயசூரியா அறிவித்திருக்கிறார். (உ–எ)

## சுபநேரம்

28-07-1987
செவ்வாய்க்கிழமை
சுபநேரம்:-
10.32 முதல் 12. 02வரை
ராகுகாலம்:-
3.02 முதல் 4.32 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

## ராஜீவின் விஜயம் உறுதி நாளை கொழும்பு வருவார்

புதுடில்லி, ஜூலை 28

பிரதமர் ராஜீவ்காந்தி இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதன்கிழமை கொழும்பு செல்வார்.

புதுடில்லியில் வெளிநாட்டமைச்சு இதனை நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்தது.

இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன, திருமதி ஜெயவர்த்தன ஆகியோரின் அழைப்பை ஏற்று பிரதமர் செல்கின்றார்.

பிரதமருடன் அவரின் பனைவி சோனியாவும் விஜயம் செய்வார்–

வியாழக்கிழமை பிற்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ், பிரபாவுடன் எம். ஜி. ஆர். ஆராய்வு

புதுடில்லி, ஜூலை 28

இலங்கை இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான புதிய யோசனைகள் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரன் நேற்று பிரதமர் காந்தியுடன் ஒரு மணி நேரம் வரையில் பேச்சுக்கள் நடத்தினார்.

பேச்சுக்களில் முதலமைச்சருக்கு உதவியாகத் தமிழக உணவு அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரனும் கலந்து கொண்டார்.

தமிழக முதல்வர், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடனும் நேற்று சுமார் ஒரு மணி நேரம் பேச்சு நடத்தினர். (உ–எ)

## இழுபறி நிலை குறித்து ராஜீவ் ஆலோசனை

புதுடில்லி, ஜூலை 28

தமிழீழ விடுதலைப்புலிகள் தலைவர் திரு. பிரபாகரனுடன் இந்திய அரசு அதிகாரிகள் நடத்தி வரும் பேச்சுக்களில் ஏற்பட்டு உள்ள இழுபறி நிலை குறித்து பிரதமர் ராஜீவ் காந்தி தனது சிரேஷ்ட அமைச்சர்களுடன் கடந்த ஞாயிறு இரவு ஆலோசனை நடத்தினார்.

இந்தியத் தூதர் திரு. டிக்ஸிற்றுடன் முதலில் பேசிய மனித வள மேம்பாட்டுத்துறை அமைச்சர் பி. வி. நரசிம்மராவ் பின்னர் பிரதமரைச் சந்தித்து நிலைமையை விளக்கினார்.

அதைத் தொடர்ந்தே பிரதமர், சிரேஷ்ட அமைச்சர்களும் ஆலோசனை நடத்தினர். (உ–எ)

## மகா சங்கம் பூரணமாக எதிர்க்கும்

### அஸ்கிரிய தேரர் உறுதி

கொழும்பு, ஜூலை 28

நிர்ப்பந்தங்களுக்கு சரணடைந்து வடக்கு கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதைக் கைவிடமாட்டேன் — இப்படி அஸ்கிரிய பீடாதிபதி பரிபால சந்தானந்த மகாநாயக்க தேரர் தெரிவித்தார்.

அவர்மேலும் சொன்னதாவது;

உத்தேச வடக்கு கிழக்கு இணைப்பை மகாசங்கம் பூரணமாக எதிர்க்கின்றது.

இப்போது மகாசங்கத்தின் ஒற்றுமையை உடைக்க முயற்சி நடைபெறுகின்றது.

சில அரசியல்வாதிகள் என்னைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து இணைப்புக்கு ஆதரவு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## பிந்திய செய்தி

நேற்று மாலை

### புலிகள் அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 28

புதிய யோசனைகளை தாங்கள் நிராகரித்து விட்டதாக இந்திய அதிகாரிகளுக்கு உத்தியோகபூர்வமாக நேற்று மாலை விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

பிரதமர் ராஜீவ் காந்தியின் இலங்கை விஜயம் குறித்து இந்திய அரசின் உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டு ஒரு மணிநேரத்தில் புலிகளின் அறிவிப்பு வெளியிடப்பட்டதாக பி.பி.ஸி நேற்றிரவு தெரிவித்தது. (உ)

# புதிய யோசனைகளை புலிகள் நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28

தற்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் புதிய யோசனைகளை ஏற்கமுடியாது என புலிகள் நிராகரித்துவிட்டதாகப் புதுடில்லி வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

★ தற்போதைய யோசனைகளும் பேச்சுவார்த்தையும் இந்திய, இலங்கை அரசின் நலன்களை மட்டுமே கருத்தில் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது.

★ புலிகளை நிராயுத பாணிகளாக்கி அவர்களைத் தோற்கடிக்கும் நோக்கிலேயே இலங்கை அரசு இந்தத் திட்டத்திற்கு முன்வந்திருக்கிறது. இதனை இந்திய அரசு புரிந்துகொள்ளவில்லை.

★ மீண்டும் ஓர் அரைகுறைத் தீர்வைத் திணிப்பதற்காகவே தமிழ்மக்களால் நிராகரிக்கப்பட்ட அமைப்புகளின் உதவியை இந்திய அரசு நாடுகின்றது.

— இக்கருத்துக்களை புதுடில்லியில் அரசு அதிகாரிகளிடம் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் தெரிவித்ததாக அறியப்படுகிறது. (உ)

முச்சந்தி முரளி



என்ன எல்லாம் ஒரே குழப்பமாய் இருக்குது? அங்கை சம்மதம், இஞ்சை கைச்சாத்து; அங்கை நிராகரிப்பு, இஞ்சை ஆர்ப்பாட்டம். ஒண்டுமாய் விளங்கயில்லை!

## உடன்பாடு அமுலுக்கு வந்த 6 மாத காலத்தினுள் சர்வஜன வாக்கெடுப்பு

### பிரதமர் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 28

கிழக்கில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கும் சர்வஜன வாக்கெடுப்பை உடன்பாடு அமுலுக்கு வந்த 6 மாத காலத்தினுள் நடத்தப்பட வேண்டும்.

— இப்படி பிரதமர் பிரேமதாஸ நேற்று நடைபெற்ற அமைச்சரவையின் விசேட கூட்டத்தில் தெரிவித்தார்.

இத் தகவலை பி.பி. ஸி. வானொலி நேற்று வெளியிட்டது.

புதிய யோசனையில்

(4ஆம்– பக்கம் பார்க்க)

## மந்திரிசபைக் கூட்டத்தில் டிக்ஸிற்; பிரேமா, ஜெயசூரியா வெளிநடப்பு!

கொழும்பு ஜூலை 28

நேற்றுக்காலை நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் இந்தியத்தூதர் ஜே. என். டிக்ஸிற் கலந்து கொண்டார்.

இதனையடுத்து பிரதமர் பிரேமதாஸாவும் அமைச்சர் காமினி ஜெயசூரியாவும் கூட்டத்திலிருந்து வெளியேறினர்.

புதிய யோசனைகள் குறித்து புதுடில்லியில் தமிழர் அமைப்புக்கள் நடத்திய பேச்சின் விவரங்களை திரு. டிக்ஸிற் அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்து உரைத்தார்.

பின்னர் மாலையில் இந்தியத்தூதர் டிக்ஸிற் ஜனாதிபதியைத் தனியாகச் சந்தித்துப் பேசினார்.

அமைச்சரவைக் கூட்டம் தொடங்கியபோது பிரதமர் பிரேமதாஸ கலந்துகொண்டு, புதிய யோசனை பற்றிய தமது நிலைப்பாட்டை எடுத்துரைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ–எ)

## புதிய யோசனைகள் குறித்து புதுடில்லியில் பேச்சு;

# பல தமிழர் அமைப்புகள் வரவேற்பதாக அறிவிப்பு

புதுடில்லி, ஜூலை 28

இலங்கை அரசின் புதிய யோசனை குறித்து மூன்றுவது தினமான நேற்றும் இந்திய அரசு அதிகாரிகள் தமிழர் அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்தினர்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காகச் சமர்பிக்கப்பட்டிருக்கும் புதிய யோசனைகளுக்கு, ஈழம் தேசிய விடுதலை முன்னணி, ஈ. பி. ஆர். எல். எவ், டெலோ, புளொட், தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய ஐந்து அமைப்புகளும் ஆதரவு தெரிவித்திருப்பதாக 'தூர்தர்சன்' நேற்றிரவு அறிவித்தது.

ஈரோஸ் இயக்கம் யோசனைக்கு சாதகமாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

### பேச்சுக்கள் தொடர்கின்றன

புதுடில்லி, ஜூலை 28

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனுடன் இந்திய அரசு அதிகாரிகள் நடத்தி வரும் பேச்சுக்கள் இன்னும் தொடர்கிறது.

—இப்படி இந்திய வானொலி நேற்று இரவு அறிவித்தது. (உ–எ)

## ஆயுதங்களை கைவிட புலிகள் மறுப்பு

புதுடில்லி, ஜூலை 28

சமாதான ஒப்பந்தத்தில் கூறப்பட்டபடி மூன்று தினங்களுக்குள் ஆயுதங்களை ஒப்படைக்க மாட்டோம்.

–இப்படி தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இந்திய அரசுக்கு அறிவித்துவிட்டது.

இத்தகவலை புலிகள் இயக்கப் பேச்சாளர் ஒருவர் பி.பி.சிக்குத் தெரிவித்தார்.

ஒப்பந்தப்படி இலங்கை இராணுவம் முகாம்களுக்குள் இருக்குமானால் புலிகள் அவர்களைத் தாக்கமாட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்றம் அங்கீகரிக்கும்வரை ஆயுதங்களைகைவிடோம்

### ஈரோஸ் சங்கர் கூறுகின்றார்

புதுடில்லி, ஜூலை28

அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டு சமாதான ஒப்பந்தம் நாடாளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படும்வரை நாம் ஆயுதங்களை வைத்து இருப்போம்.

— இப்படி ஈரோஸ் இயக்கப் பிரமுகர் சங்கர் தெரிவித்தார் என்று பி. பி. ஸி. வானொலி நேற்று இரவு அறிவித்தது.

பி. பி. ஸி. செய்தியாளர் கூல்றிஜ் புதுடில்லியில் இருந்து அனுப்பிய செய்தியில் இத்தகவல்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை என்ற பெயரில் அரசு நடத்தும் கபடநாடகம்

## புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 28

எம்மை இராணுவ ரீதியில் எதிர்கொள்ள முடியாத ஸ்ரீலங்கா அரசு இப்பேச்சுவார்த்தை எனும் கபடநாடகத்தின் மூலம் எம்மை நிராயுத பாணியாக்கி அடிமைப் படுத்தும் முயற்சியை தீவிரமாக்கி உள்ளது.

—இவ்வாறு விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கின்றனர்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

எம் மக்களின் எதிர்கால விடிவுக்கான இலட்சியப் போராட்டம் விடுதலைப் போராளிகளினதும், தமிழ் மக்களினதும் அர்ப்பணிப்புக்களுடன் கூடிய தியாகங்களினால் ஓர் உன்னத நிலையை அடைந்துள்ளது.

இக்கால கட்டத்தில் எமது உரிமைப்போராட்டப் பாதையில் மீண்டும் ஒரு பேச்சு மேடைக்கு தமிழ் மக்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழ் மக்களின் பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தைக்கு தமிழ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் அமைப்புக்கள் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடா!

புதுடில்லி, ஜூலை 28

புதிய சமரச ஒப்பந்தத்தில் தமிழர் அமைப்புக்கள் எதுவும் கைச்சாத்திடமாட்டா.

பிரஸ்தாப ஒப்பந்தத்தில் இரண்டு நாடுகளின் தலைவர்கள் மட்டுமே கையொப்பமிடுவர்.

உடன்பாட்டை தமிழர் அமைப்புக்கள் கௌரவிக்கும் என்பதற்கு இந்தியா உத்தரவாதம் அளிக்கின்றது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சின்னஞ்சிறு விளம்பரம் ★

**விற்பனைக்கு**

மரியாயே வாழ்க எம்மிடம் திருவழிபாட்டுக்குத் தேவையான செபமாலைகள், செபப் புத்தகங்கள், மெழுகு திரிகள், படங்கள், வர வணிக்கங்கள் முதலியனவும், ''பாதுகாவலன்'' இதழும், 'புதியஉலகம்' சஞ்சிகையும், மோட்ச பாதை, செபமாலைத் தியானம் செபப்புத்தகங்களும் விற்பனைக்குண்டு புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோர்ஸ், 140, கருவில் வீதி, கரம்பன், ஊர்காவற்றுறை. (1367)


## விடுகள் தகர்ப்பு

வடமராட்சி, ஜூலை 28 வடமராட்சியில் மீண்டும் இராணுவம் வீடுகளை குண்டுவைத்து தகர்த்து வருகிறது. இந்திய ஹெலிக்கொப்டர்கள் வந்து சென்றதிலிருந்தே வீடுகள் தகர்க்கப்பட்டு வருகின்றன என்று அங்கிருந்து வந்தவர்கள் தெரிவிக்கின்றனர் (இ-7-160)

★ பொதுப் பரீட்சைகளில் கடமையாற்ற

# சகல ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம்

## யாழ். கல்விப்பணிப்பாளர் மன்சூர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூலை 28 பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் பொதுப் பரீட்சைகளில் கடமை புரிவதற்கு யாழ் மாவட்ட சகல ஆசிரியர்களுக்கும் சந்தர்ப்பம் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது- இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் ஜனாப் மன்சூர் தெரிவித்தார்.

இதுவரை காலமும், ஒரே குழுவினரே சகல பரீட்சைக் கடமைகளிலும் ஈடுபட்டு அதற்குரிய மேலதிக ஊதியத்தையும் பெற்றனர். இதனால் பல ஆசிரியர்கள் விரக்தியடைந்திருக்கின்றனர்.

பரீட்சைக் கடமையாற்றக்கூடிய தகுதியுள்ளவர்களது பட்டியல் ஒன்று யாழ் கல்வித் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டு அதன்படி சகல கல்வித்துறை ஊழியர்களுக்கும் சமசந்தர்ப்பம் அளிக்கும் திட்டத்தினை யாழ் கல்வித் திணைக்களம் தயாரித்துள்ளது.

பரீட்சைக் கடமைகளில் ஈடுபடும் போது விடைத்தாள்கள் திருத்துவதற்கென ஆசிரியர்களோ, அதிபர்களோ இடைநடுவில் செல்வதற்கு எவ்விதத்திலும் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தினை அவர்கள் தகுதியான ஏனையவர்களுக்கும் விட்டுக்கொடுக்க வேண்டும்- இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (உ-119)

# கடமையின் போது அகால மரணமாகும் ஆசிரியர்களுக்கு நஷ்டஈடு

யாழ்ப்பாணம், ஜூலை28 கடமையின் போது அகால மரணமான அனைத்து ஆசிரியர்களுக்கும் கல்வி அமைச்சின் சிபார்சின் பேரில் நஷ்டஈடு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

கடமையின் போது அகால மரணமான வீமன்காமம் மகாவித்தியாலய அதிபர் திரு. சிவராசாவுக்கும் ஆசிரியர் ஜனாப் ஜலீலுக்கும் நஷ்டஈடு வழங்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன

இவர்களுக்கு ஐந்து வருட சம்பளம் நஷ்டஈடாகக் கிடைக்கவுள்ளதாகவும் அறியப்படுகிறது. (இ)

# விடைத்தாள் திருத்தும் வேலை 11 ஆம் திகதி

பலாலி, ஜூலை 28 தற்போது நடைபெறும் ஜீ. சி. ஈ. உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்கள் திருத்தும் வேலைகளின் முதற்கட்டம் எதிர்வரும் ஆகஸ்ட்11ஆம் திகதியில் இருந்து ஆகஸ்ட் 23 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை நடைபெறும் பாடங்களே இவ்வாறு மதிப்பிடப்படவுள்ளன.

பௌதிகவியல், கணக்கியல், விவசாய விஞ்ஞானம், உயிரியல், வரலாறு, பரதநாட்டியம், தூயகணிதம், மனையியல், பொருளியல், தாவரவியல், தமிழ், பிரயோக கணிதம், பொருளியல் ஆகிய பாடங்களே முதற்கட்டமாக மதிப்பிடப்படவுள்ளன. (உ-119)

# இணைப்புக்கு ஆதரவாக வாக்களிக்க மாட்டேன்

## என்கிறார் காமினி ஜெயசூரியா

கொழும்பு, ஜூலை 28 வடக்கு-கிழக்கை இணைக்கும் புதிய யோசனைக்கு ஆதரவாக என்னால் வாக்களிக்க முடியாது.

இப்படி அமைச்சர் காமினி ஜெயசூரியா ஜனாதிபதிக்கு அறிவித்துவிட்டார்.

புதிய யோசனை அரசு சரணாகதி அடைந்துவிட்டதை எடுத்துக்காட்டுகின்றது.

ஆகவே புதிய யோசனைக்கு ஆதரவாக வாக்களிக்க எனது மனச்சாட்சி இடம் கொடுக்காது.

எனது மனச்சாட்சிக்கு எதிராக நான் வாக்களிக்க மாட்டேன்.

இப்படி அமைச்சர் காமினி ஜெயசூரியா சொன்னார். (இ-எ)


## பிரயாண ஒழுங்கு

★ சவூதி ★ குவைத்

- விட்டுப் பணிப்பெண்கள்
- கார் சாரதி
- கூலியாட்கள்
- தாதிகள் (பெண்)

ஆகியவற்றுக்கு பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

★ அத்துடன் பாஸ்போட், பொண்ட், சர்வதேச வாகன லைசென்ஸ் ஆகியன எடுத்துக் கொடுக்கப்படும்.

★ தொடர்புகொள்வோர் 29ஆம் திகதிக்கு முன்பு தொடர்பு கொள்ளவும்.

விபரங்களுக்கு:-

K. K. அம்பிகாபதி

(1365) கலைமணி வீதி, கட்டப்பிராய்.


## செய்திக்கொத்து

### வீடுகளைப் பார்க்கச் சென்ற இருவர் திரும்பவில்லை

அச்சுவேலி, ஜூலை 28 ஆவரங்காலில் குடும்பத்தினரைத் தங்கவைத்துவிட்டு தமது வீடுகளைப் பார்ப்பதற்கு வடமராட்சிக்கு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் திரும்பி வரவில்லை.

ரி. பெனடிற், எஸ் குமாரகுலசிங்கம் ஆகியோரே இந்த இருவரும் ஆவர்.

இவர்கள் சென்ற வேளையில் வடமராட்சிப் பகுதியில் இராணுவத் தாக்குதல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் இவர்களுக்கு ஏற்பட்ட கதிபற்றி திட்டவட்டமாகத் தகவல் எதனையும் பெற முடியவில்லை என உறவினர்கள் தெரிவித்தனர். (இ-11)

### பார்வையிட்டது

திருகோணமலை, ஜூலை 28 பலவந்த புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள திருமலை மாவட்டத்தில் கைதான தமிழர்களை திருகோணமலையில் இருந்து சென்ற ஒரு குழு பார்வையிட்டது.

சர்வோதயஇயக்கம், இக்குழுவை பலவத்தைக்கு அழைத்துச் சென்றது. (இ-எ-150)

### புதிய அதிபர்

மண்டைதீவு, ஜூலை 28 மண்டைதீவு மகா வித்தியாலயத்தின் புதிய அதிபராக திரு சு. நடேசபிள்ளை இம்மாதம் முதல் நியமனம் பெற்றுள்ளார். இவ் வித்தியாலய அதிபர் திரு சு. சண்முகநாதன் வேலணை துரைச்சாமி வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றுள்ளார். (இ-88)

### இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை28 யாழ். போதனா வைத்தியசாலை பொலிஸ்பகுதியில் கடமையாற்றிய மூன்று பொலிஸாருக்கு புலோலி பொலிஸ் நிலையத்துக்கு இடமாற்றம் கிடைத்துள்ளது. (இ-10)

### மீண்டும் இயங்குகிறது

கோப்பாய், ஜூலை 28 நீர்வேலிக் கண்ணாடித் தொழிற்சாலை இந்த வாரம் தொடக்கம் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது. இதனால் இப்பகுதியில் வேலையற்று இருந்த இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். (இ ரி)

### தாமு கந்தையா நினைவாலயம்

அச்சுவேலி, ஜூலை 28 அமரர் தாமு கந்தையா நினைவாலயம் ஞாயிற்றுக்கிழமை புத்தூர் கிழக்கில் திறந்து வைக்கப்பட்டது. நினைவுக் கலையரங்கத்தை தாமு கந்தையாவின் தாயார் திறந்து வைத்தார்.

கலையரங்கத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தைத் தொடர்ந்து வில்லுப்பாட்டு, நாடகம் என்பன இடம்பெற்றன. (இ-11)

# கடமையை உணர்ந்து மக்கள் போற்றும்படி நடக்கவேண்டும்

மானிப்பாய், ஜூலை 28 உலகம் பூராவும் உள்ள நாடுகளில் எல்லாம் எமது கழகம் அமைக்கப்பட்டு மக்களுக்கு இன, மத, மொழி வேறுபாடின்று சேவைசெய்து வருகின்றது. மானிப்பாயில் அமைக்கப்பட்டுள்ள இக்கழகம் ஓர் அவசிய சந்தர்ப்பத்தில் உருவாக்கப்பட்டது கழக அங்கத்தவர்கள் தம் கடமையை உணர்ந்து மக்கள் போற்றும்படி நடக்கவேண்டும்.

மானிப்பாய் கோவில் பற்று லயன்ஸ் கழக அங்கத்தவர்களுக்கு சர்வதேச சான்றிதழ் வழங்கும் வைபவம் நடைபெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ் மாவட்ட லயன்ஸ் கழகச் செயலாளர் திரு. இ. சபாரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

லயன்ஸ் திரு எஸ். பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட உபமாவட்ட ஆளுநர் திரு. எஸ் இராஜேந்திரன் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

கழகத்தின் உபதலைவர் திரு. நா. நகுலேஸ்வரன் சம்பிரதாய முறைப்படி மணி அடித்து வைபவத்துக்கு வந்திருந்தவர்களை வரவேற்றார்.

லயன்ஸ் கழக சேவைகள் பற்றி திரு. இ. சபாரத்தினம், திரு. எஸ். இராசேந்திரன், திரு. நா. நகுலேஸ்வரன் ஆகியோர் உரையாற்றினர். (இ-90)

### முகாம் அமைக்க உதவி

சங்கானை, ஜூலை 28 சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்தில் தஞ்சமடைந்திருக்கும் 187 குடும்பங்களுக்கு தற்காலிக முகாம் அமைக்க வட்டு லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

பாடசாலையில் புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கும், வகுப்புகளைப் பாவிப்பதற்கும் வசதியாகபாடசாலைக் கட்டடங்களில் உள்ள அகதிகளுக்குபுதியமுகாம் அமைக்க உதவி புரியும்படி, சங்கானை அகதிகள் புனர்வாழ்வு அமைப்பு கேட்டுள்ளது.

அதையடுத்து வட்டு லயன்ஸ் கழகம் 3 ஆயிரம் ரூபாவுக்கான கசோலையும், காட்டுத் தடிகளும் அன்பளிப்புச் செய்துள்ளது. (உ-29)

### மீண்டும் தலைவர்

வட்டுக்கோட்டை, ஜூலை 28 வட்டுக்கோட்டை சின்கோவிலடி பிரசைகள் குழுவின் முன்னாள் தலைவர் திரு. சரவணை சின்னப்பு மீண்டும் தலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெற்ற வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இத்தெரிவு இடம்பெற்றது (இ-161)

# இனப்பிரச்சினையைத் தீர்க்கும் சக்தி இந்தியாவுக்கு உண்டு என சோவியத் மக்கள் நம்புகின்றனர்

## விஜயானந்தன் பேச்சு

யாழ்ப்பாணம், ஜூலை 28 இலங்கை இனப்பிரச்சினையை இந்தியா தனது படை பலத்தின் மூலமல்லாது, சுமுகமாகத் தீர்த்து வைக்கும் என்று சோவியத் மக்கள் திட்டவட்டமாக நம்புகின்றனர். அதற்குரிய சக்தி இந்தியாவுக்கு உண்டு என்றும் அவர்கள் நம்புகின்றனர்.

இவ்வாறு அண்மையில் சோவியத் யூனியன் சென்று திரும்பிய திரு. சி. விஜயானந்தன் இலங்கை—சோவியத் நட்புறவுச் சங்க யாழ் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றும் போது தெரிவித்தார்.

மேற்படி பொதுக்கூட்டம் ஞாயிற்றுக்கிழமை நல்லூர் இந்து விடுதியில் திரு அ. வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

அவர் தமது பேச்சில் மேலும் குறிப்பிட்டதாவது:-

சோவியத் யூனியனில் தங்கியிருந்த வேளை உலகத்தில் உள்ள பெரும்பாலான கம்யூனிஸ்ட் தலைவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

யாழ்ப்பாணத்தின் தற்போதைய நிலைமை, தமிழர்களுக்கு ஏற்பட்ட உயிர், உடைமை அழிவுகள், அவர்கள் அனுபவிக்கும் அனர்த்தங்கள் ஆகியன பற்றிய விவரங்களை அந்தத் தலைவர்களுக்கு விவரமாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறினோம்.

அவர்கள் நாம் கூறியதை மிகவும் கவனமாகச் செவிமடுத்தனர்.

சோவியத் நாட்டு முக்கிய பிரமுகர்கள் சிலரையும் நாம் அங்கு சந்தித்துப் பேசினோம்.

சோவியத் யூனியன் உலகில் எந்த ஒரு தேசிய இனமும் அழிவதைப் பார்த்துக்கொண்டிருக்காது என்ற அபிப்பிராயத்துக்கு என்னால் வர முடிந்தது—இவ்வாறு அவர் கூறினார்.

திரு. சி. நாகராசா பேசுகையில் கூறியதாவது:-

சோவியத் யூனியனிலும் பல இனங்கள், பல மொழிகள் உள்ளன.

அங்கே 54 சத வீதத்தினர் ருஷ்ய மொழியை பேசுபவர்களாக இருந்தும்கூட எல்லாமொழிகளுக்கும் சம உரிமை, சம அந்தஸ்து ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

ஆனால் இங்கோ இரண்டு மொழிகளைப் பேசுபவர்கள் மட்டுமே உள்ளனர்.

அப்படியிருந்தும் தமிழினத்திற்கோ, தமிழ் மொழிக்கோ உரிய அந்தஸ்து வழங்கப்படவில்லை. மாறாகத் தமிழ் இனம் அழிக்கப்பட்டு வருகிறது—என்று அவர் [illegible] ராஜா பேசுகையில்— ''உலகத்தில் உள்ள நாடுகளைப் பார்க்கும் போது சோவியத் யூனியனில் மட்டுமே மனிதனின் அடிப்படை அபிலாஷைகள் யாவும் நிறைவேறியுள்ளன.

''அந்த நாட்டைப் போலவே எமது நாடும் மாறவேண்டும் என்று தான் விரும்புகின்றேன்'' என்றார். (அ-7)

## மக்கள் முகம்

### விக்கினேஸ்வரா சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், ஜூலை 28 வாதரவத்தை ஸ்ரீ விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் தலைவர் திரு. இ. தெய்வேந்திரம் தலைமையில் நடைபெற்றபோது நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:- திரு. க. சத்தியசீலன், உப-தலைவர்:- திரு. மா. தங்கத்துரை, செயலாளர்:- திரு. ம. அமிர்தகுலசிங்கம், உப-செயலாளர்:- திரு. கு. பசுபதிதாசன், பொருளாளர்:- திரு க. சற்குணராசா, பத்திராதிபர்:- திரு. து. யோகேஸ்வரன், கணக்காய்வாளர்:- திரு. மு. கணேசநாயகம்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்:- திரு. து. சத்தியதேவன், திரு. இ. ஜெகதிலகராசா, திரு. பொ. தெய்வேந்திரன், திரு. மு. இராசேந்திரசிங்கம், திரு. க. மோகனதாசன், திரு. ந. ஜெயரட்ணராசா, திரு க. கோணேஸ்வரன், திரு. இ. தெய்வேந்திரன், திரு. செ. குணராசா, திரு. வ. செல்லையா. (இ)

# வட்டு லயன்ஸ் கழக சேவைக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை28 வட்டு லயன்ஸ் கழகத்தினரின் சேவை, ஒரு முன் மாதிரியான சேவை இப்படியான சேவைகளை ஏனைய கழகங்களும் செய்ய முன்வர வேண்டும்.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயத்திலுள்ள அகதிகளுக்கு வட்டு லயன்ஸ் கழகத்தினரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட மிகப் பெரிய கொட்டகை ஒன்றைத் திறந்துவைத்[illegible] பின்னர் இந்திய செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. சௌத்திரி மேற்கண்டவாறு கூறினார்.

சனியன்று நடைபெற்ற இந்த வைபவத்தில் இந்திய செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி திரு. வேணுகோபால் மற்றும் திரு. ஆர் பாலசுப்பிரமணியம், திரு இ. விஜயரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

ஆறுயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்தக் கொட்டகையில் [illegible] கது. (இ-10)



## Horizon Enterprises

26.7.1987 உதயனில் வெளிவந்த HORI ON NT:REPRI:ES விளம்பரத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்த பெயர்ப் பட்டியல் ஆகஸ்ட் 1ஆம் திகதி சனிக்கிழமை பிரயாணம் செய்ய உள்ளவர்களின் விபரமே ஆகும்.

1987 தை மாதம் முதல் சென்ற மாதக்கடைசி வரையில் பிரயாணம் மேற்கொண்டோர் பட்டியல் அல்ல என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.



7 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



சிமியோன அமரன்
28 . 7 . 80

28-7-87 காலை மணி 6-15 க்கு யாழ். பரி. கொஞ்சேஞ்சி மாதா தேவாலயத்தில் அன்னாரது ஆத்ம சாந்தி வேண்டி திருப்பலிப்பூசை நடைபெறும்.

பிரிவால் துயருறும்
தந்தை, தாய், சகோதரனும், குடும்பத்தினரும்.

(1362)



82ஆம் நாள்

நினைவஞ்சலி

பதியின் படைப்பு: 12 - 07 - 1948 சதியின் பிடிப்பு: 08 - 05 - 1987



அமரர்
பொன்னுச்சாமி பரலோகநாதன் (லோகன்) சில்லாலை.
(இ.போ.ச. ஊழியர்: கிளிநொச்சி சாலை)

எங்கள் குடும்ப ஒளிவிளக்காய்
எங்கள் சமூக முழுநிலவாய்
தங்கத் தமிழ் மண்ணின்
தங்கத் தலை மகனாய்
எங்கள் புகழ் விளங்க
எங்கும் தொழில் புரிந்தாய்
இங்குநின் புகழ் பொறுது
தீங்குடன் எழுந்தார் கையில்
நீங்களும் அகப் பட்டீரோ!

தங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் உங்கள் பிரிவால் துயருறும்

தாய், தந்தை, சகோதரர்கள், சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள், மருமக்கள், பெறுமக்கள், நண்பர்கள்.

அம்மன் வீதி,
பண்டத்தரிப்பு.

(1364)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

ஐயத்தை நீக்கிவிட்டு பக்தி செய்யுங்கள். பரம்பொருளைப் பற்றி ஐயப்பட வேண்டாம். ஐயம் குடிகொண்ட மூளையில் ஞானப்பால் சுரக்காது.

— ராமகிருஷ்ண பரமஹம்ஸர்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி 24805 22073

28 07.1987 த.பெ.இல - 23

# பூரண பிராயச்சித்தம்

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக ஸ்ரீலங்கா அரசாங்கம் முன்வைத்த யோசனை, இன்னும் ஒப்பந்தமாகும் நிலை வரவில்லை.

அதில் இரண்டு முக்கிய மாற்றங்களைச் செய்தாக வேண்டும் என்று புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரன் நிபந்தனை விதித்திருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

தமிழர் தரப்பு அபிப்பிராயம் அறிந்து கொள்ளப்படுவதற்கு முன்னரே ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கான திகதியை ஸ்ரீலங்கா அரசு தனது சொந்தத்தில் நிர்ணயித்துக் கொண்டது. ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காக இந்தியப் பிரதமர் நாளை புதன்கிழமை கொழும்பு வருவார் எனவும் அறிவித்தது.

எப்படியாவது தமது புதிய யோசனைகளை ஒப்பந்தமாக்கிவிட வேண்டும் என்று ஸ்ரீலங்கா அவசரப்படுவது தெளிவாகத் தெரிகின்றது. அந்த அவசரத்துக்கு இரண்டு காரணங்கள் இருக்க வேண்டும் என நாம் நினைக்கிறோம்.

புதிய யோசனைகளில் அடங்கிய சலுகைகளைத் தமிழர்களுக்கு வழங்குவதை ஆதரிக்காத சக்திகள் தென்னிலங்கையில் பல உண்டு. ஆளும் கட்சிக்குள்ளேயே கருத்து வேறுபாடு உண்டு. அமைச்சர்களிடையிலும் பிளவு உண்டு.

ஆகையால் ஒப்பந்தம் கைச்சாத்தாவது தாமதிக்கத் தாமதிக்க, எதிரணிச் சக்திகள் ஒப்பந்தம் கைச்சாத்தாவதைத் தடுக்கச் சூழ்ச்சி செய்து நிலைமையைக் குழப்பி விடலாம். அதற்கு முன்னர் புதிய யோசனைகளை உத்தியோக பூர்வ ஒப்பந்தமாக்கி விட வேண்டும் என்பது அவசரத்திற்கான ஒரு காரணம்.

ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதைத் தாமதித்தால் அல்லது காலங்கடத்தினால் தமிழர் தரப்பில் வேறு பல நிபந்தனைகள் முன்வைக்கப்படலாம் என்பதும் அரசின் அவசரத்துக்கு இரண்டாவது காரணம்.

ஆகவே, இந்தரப்புகளின் தொல்லைகளில் இருந்தும் தப்பித்து, தாம் நினைத்ததையே நிறைவேற்ற அதீத அவசரமே நல்ல மார்க்கம் என்று ஜனாதிபதியும் அவரது சகாக்களும் நினைத்திருக்க வேண்டும்.

தென்னிலங்கையில் உள்ள எதிரணிகளின், தீவிரவாதிகளின் தடுப்பு வலைக்குள் சிக்கிக் கொள்ளாமல் இருக்க அரசு அவசரப்படுவதில் நியாயம் உண்டு.

கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக தமிழர்களின் உரிமைகள் தென்னிலங்கை அரசியல் தலைவர்களின் பகடைக் காய்களாக உருட்டப்பட்டு சதுரங்கம் விளையாடப்பட்டது சரித்திரம் கண்ட உண்மை. (அப்படி உருட்டி விளையாடிய சொந்த அனுபவம் இலங்கையின் மூத்த அரசியல் வாதிகளில் ஒருவரான ஜனாதிபதிக்கும் உண்டு.)

ஆகையால் தென்னிலங்கைத் தீவிரவாதிகளுக்கு ஜனாதிபதி பயப்படுவது நியாயப்படுத்தக்கூடிய அச்சமாகும்.

ஆனால் அவருக்கு ஒரு ஆலோசனை.

சிங்கள மக்கள் மத்தியில் இருந்து வரும் எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் ஒப்பந்தத்தை அமுல் செய்யப்போவதாக அறிவித்திருக்கிறீர்கள். அந்த மன உறுதி பாராட்டத்தக்கது.

தர்மத்தின் வழி நிற்கும்போது, நீதியின் வழி செல்லும்போது தீயவருக்கு அஞ்ச வேண்டியதில்லை. தர்ம கைங்கரியத்துக்கு இறைவன் துணை நிற்பான் என்பதைச் சகல மதங்களும் எடுத்துரைக்கின்றன. எனவே நீங்கள் அவர்களுக்கு அஞ்சவேண்டியதில்லை.

ஆனால் நீங்கள் தர்மத்தின் வழிக்கு வந்துவிட்டீர்களா என்பதைச் சற்று உங்கள் மனத்தைத் தட்டிக் கேளுங்கள்.

தமிழர்கள் கேட்டது தனிநாடு. அதற்கு மாற்றாக அவர்கள் தாயகத்தில் சுயாட்சி நடத்தவாவது உங்கள் புதிய யோசனை வழி செய்ய வேண்டாமா? அவர்களுக்குச் சுயநிர்ணய உரிமை வழங்க வேண்டாமா?

செய்வதைத் திருந்தச் செய்யுங்கள். வழங்குவதைப் பூரணமாகக் கொடுங்கள்.

தமிழர்களுக்குச் சிறிய அளவில் நியாயம் செய்தாலும் சரி, பெரிய அளவில் நியாயம் செய்தாலும் சரி. சிங்களத் தீவிரவாதிகளின் எதிர்ப்பை எப்படியும் நீங்கள் தேடிக்கொள்ளப்போகிறீர்கள்.

சமஷ்டி அரசமைப்பை உருவாக்கி தமிழர்களுக்குத் தனி ஆட்சி வழங்குங்கள். அதுவே தமிழர்களுக்கு நீங்கள் வழங்கும் ஆகக் குறைந்த நியாயமான உரிமையாக இருக்க முடியும். அதுவே நீங்கள் தர்மத்தின் வழி நிற்கிறீர்கள் என்பதை எடுத்துக் காட்டும்.

நீங்கள் இதுவரை விட்ட தவறுகளுக்கு அப்போதுதான் பரிபூரணமான பிராயச்சித்தத்தைச் செய்தவர் ஆவீர்கள்.

---

★ அணுகுண்டு தயாரிப்பு எஃகுப் பொருள்:

# கடத்தல் குழுவுடன் பாக். அரசு தொடர்பு!

## நிரூபிக்கும் சான்று இருப்பதாக அமெரிக்க அதிகாரிகள் தகவல்

நியூயோர்க், ஜூலை 27

அமெரிக்காவில் இருந்து அணுக்குண்டு தயாரிப்பதற்குத் தேவையான எஃகுப் பொருள்களைக் கடத்திய குழுவுக்கும் பாகிஸ்தான் அரசாங்கத்துக்கும் இடையே தொடர்புகள் இருக்கின்றன.

இதனை நிரூபிக்கும் சான்றுகள் கைப்பற்றப்பட்டிருப்பதாக அமெரிக்க அரசு அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

இதேவேளை பாகிஸ்தானுக்கு ஆயுத உதவிகளை வழங்குவது குறித்து இந்திய அரசு, அமெரிக்காவிடம் மீண்டும் கவலை தெரிவித்திருக்கின்றது.

அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் மைக்கல் ஆமகோஸ்ட்டைச் சந்தித்து, வாஷிங்டனில் உள்ள இந்தியத் தூதர் இந்தியாவின் கவலையைத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் அணுக்குண்டு தயாரிக்கும் திட்டம்பற்றி எச்சரிக்கை செய்ய உதவி அமைச்சர் ஆமகோஸ்ட் மாத இறுதிக்குள் பாகிஸ்தானுக்கு விஜயம் செய்ய இருக்கின்றார்.

பின்னர் இந்தியாவுக்கும் திரு. ஆமகோஸ்ட் விஜயம் செய்வார். (இ-எ)

# பிரெஞ்சு கடற்படை உஷார் நிலையில்

பாரிஸ், ஜூலை 27

பிரெஞ்சு அரசு தனது கடற்படையை உஷார் படுத்தியுள்ளது.

லெபனானில் பிரெஞ்சுப் பிரசைகளைத் தாக்கப் போவதாக ஈரான் தீவிரவாத அமைப்பு ஒன்று பயமுறுத்தல் விடுத்திருப்பதைத் தொடர்ந்து, இந்த உஷார் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக பிரெஞ்சுப் பாதுகாப்பு அமைச்சர் அறிவித்தார்.

ஒரு விமானந்தாங்கிக் கப்பல், மூன்று யுத்தக் கப்பல்கள் மத்தியதரைக் கடலில் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் பிரெஞ்சு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

21 மணித்தியால அறிவித்தலில் சம்பந்தப்பட்ட பிரதேசத்தினுள் நுழையக்கூடிய நிலையில் அவை இருக்கின்றன.

இப்படி மேலும் பிரெஞ்சு அமைச்சர் சொன்னார். (இ-எ)

### 28 பயணிகள் பலி!

பிரேஸில், ஜூலை 27

தெற்கு பிரேஸிலில் இடம்பெற்ற பஸ் விபத்து ஒன்றில் 28 பயணிகள் உயிரிழந்தனர்.

இதில் பதினைந்து பேர் குழந்தைகள்.

பஸ் வீதியை விட்டு விலகி, நீரோடை ஒன்றில் மூழ்கியபோது இச்சம்பவம் இடம் பெற்றது. (இ-எ)

### 91 வயதுப் பாட்டியின் சாதனை

டோக்கியோ, ஜூலை 27

ஜப்பானில் உள்ள மிக உயரமான பியூஜி மலையை ஏறிச்சாதனை புரிந்தார் 91 வயதான பாட்டி.

இச்சாதனை இம்மாதம் 21 ஆம் திகதி இடம்பெற்றது.

பியூஜி மலையில் ஏறிய ஆகக்கூடிய வயதான நபர் என்ற பெயரை 'விட்னி பாட்டி' என்று அழைக்கப்படும் இம்மூதாட்டி பெற்றார்.

அமெரிக்காவிலுள்ள 'விட்னி' மலையை ஏறியதால் இப்பாட்டி 'விட்னி பாட்டி' என்று செல்லமாக அழைக்கப்பட்டு வருகின்றார். (இ-எ)

### 5 ஈரானியர் 3 பாகிஸ்தானியர் கைது!

கராச்சியில் அண்மையில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக 5 ஈரானியப்பிரசைகளும் 3 பாகிஸ்தானியர்களும் கைது செய்யப்பட்டனர்.

இச்சம்பவங்களில் 70க்கு அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே.

சந்தேக நபர்கள் மீது விசாரணை நடத்த விசேஷ நீதிமன்றங்களை நியமிக்கப் போவதாக பாகிஸ்தான் ஜனாதிபதி ஸியா-உல்-ஹக் அறிவித்திருக்கின்றார். (இ-எ)

### வெளி உலகில்

# இஸ்ரவேலின் நிலையை எகிப்து ஏற்கவில்லை

டெல்அவிவ், ஜூலை 27

பலஸ்தீனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண வரையறுக்கப்பட்ட சர்வதேச மாநாடு ஒன்றை நடத்தலாம் என்ற இஸ்ரவேலின் நிலையை, எகிப்து ஏற்றுக்கொள்ளவில்லை.

சம்பந்தப்பட்ட சகல நாடுகளும் கலந்து கொள்ளும் சர்வதேச சமாதான மாநாடு ஒன்று நடத்தப்பட வேண்டும் என்று எகிப்திய வெளிநாட்டமைச்சர், இஸ்ரவேல் பிரதமரிடம் தெரிவித்தார்.

வரையறுக்கப்பட்ட சர்வதேச மாநாடு ஒன்றுக்குத் தான் ஒத்துக் கொள்வதாக இஸ்ரவேல் பிரதமர் எகிப்திய அமைச்சரிடம் தெரிவித்தார். எகிப்திய அமைச்சர் இதனை நிராகரித்து விட்டார்.

பூரணம் நிறைந்த சர்வதேச சமாதான மாநாடு நடத்தப்பட வேண்டும் என்பதில் இஸ்ரவேல் அமைச்சரவைக்குள் கருத்து வேறுபாடு உண்டு.

பிரதமர் அதனை எதிர்த்து வருகின்றார். வெளிநாட்டமைச்சர் ஷிமொன் பெரஸ் அதனை ஆதரிக்கின்றார் என்பது குறுப்பிடத்தக்கது. (இ-எ)

### சார்க்கில் சேர ஆப்கான் அரசு விண்ணப்பம்

டாக்கா, ஜூலை 27

சார்க் அமைப்பில் சேர்த்துக் கொள்ளும்படி ஆப்கானிஸ்தான் அரசு விண்ணப்பித்திருக்கின்றது.

இவ் விண்ணப்பத்தை பங்களாதேஷ் அரசு எதிர்த்துள்ளது. (இ-எ)

### கடல் கண்ணிகளை அகற்றும் வேலை துரிதம்

வாஷிங்டன், ஜூலை 27

வளைகுடாவில் ஈரான் போட்டுள்ள கடல் கண்ணிகளை அகற்றும் நடவடிக்கைகளை அமெரிக்கக் கடற்படை தீவிரப் படுத்தியுள்ளது.

இதனை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் காஸ்பர் வைன்ஸ்பேர்கர் அறிவித்தார்.

அண்மையில் அமெரிக்கக் கடற்படை உதவியுடன் வந்த குவைத் எண்ணெய்க் கப்பல் கண்ணி வெடியில் சிக்கி சேதமடைந்தது தெரிந்ததே. (இ-எ)

### கூட்டத்தொடர் ஆரம்பம்

புதுடில்லி, ஜூலை 27

இந்திய நாடாளுமன்றத்தில் மழைக்காலக் கூட்டத்தொடர் திங்கட்கிழமை ஆரம்பமானது. (இ-எ)

---

★ ஜனாதிபதி சூளுரை

# பிரபாகரனின் வாளை எனகையால் ஸ்ரீகோதா மண்டபத்தில் தொங்கவிடுவேன்

ஐக்கிய தேசியக் கட்சியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி ஜெயவர்த்தன ஆற்றிய உரையின் முக்கிய அம்சங்கள் இங்கு பிரசுரமாகின்றன.

சிறிமாவோ அம்மையாரின் பேச்சுக்குச் செவி சாய்க்க வேண்டாம்.

அவர் எதிர்க்கட்டும்; மகாநாயக்கதேரர்கள் எதிர்க்கட்டும். நான் கவலைப்படமாட்டேன்.

அமைச்சரவை உண்டு; ஆளுங்கட்சி எம். பிக்கள் குழு உண்டு; நாடாளுமன்றம் உண்டு. நாடாளுமன்றம் தான் உயர்ந்தது.

நாடாளுமன்றம் புதிய யோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை என்றால் அதைக் கலைத்து விடுவேன். இதுதான் ஜனநாயகம்.

வடக்கு - கிழக்கின் தற்காலிக இணைப்புக்கு நான் ஏன் சம்மதித்தேன்? பயங்கரவாதத்துக்கு முடிவுகட்டவேண்டும் என்பதற்காகவே.

உடன்பாடு கைசாத்திடப்பட்டவுடன் தீவிரவாதிகளிடம் சென்று ஆயுதங்களைக் கேட்போம். அவர்கள் ஒப்படைப்பார்கள்.

ஆயுதங்களை ஒப்படைக்கும் போது பிரபாகரனும் தனது வாளை ஒப்படைக்க வேண்டும்.

நானே அந்த வாளை ஸ்ரீகோதா மண்டபத்தில் தொங்க விடுவேன்.

தீவிரவாதச் செயல்களினால் நாட்டின் பொருளாதார நிலைமை சீர்கெட்டிருக்கின்றது.

திருகோணமலையில் இருந்து குச்சவெளி வரையான உல்லாசப் பயண ஹோட்டல்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளன; சில மூடப்பட்டு விட்டன.

கொழும்பில் உள்ள பெரிய ஹோட்டல்களில் முக்கால் பங்கு அறைகள் காலியாக உள்ளன.

வேலையில்லாத் திண்டாட்டம் அதிகரிக்கின்றது. நாடு வங்குரோத்து நிலையை அடையும் கட்டத்தை அடைந்துள்ளது. மக்களுக்கு உணவு வழங்குவதே கஷ்டமாகிவிடும்.

### யுத்தம் தொடர்ந்தால்

இந்த யுத்தம் தொடரின் இந்தியா தீவிரவாதிகளுக்கு உதவி செய்யும்.

இந்தியா இலங்கைக்கு வரவேண்டியதில்லை; ஆயுதங்களைக் கொடுப்பதை மட்டும் செய்தால் போதும்.

சாம் ஏவுகணைகள் இருந்தால் ஆயிரம் அடி உயரத்தில் செல்லும் ஹெலிக்கொப்டர், விமானங்களைத் தாக்க முடியும். தோளில் வைத்து செயல்படுத்தும் ஏவுகணைகளும் உண்டு.

### முகாம்களைச் சுற்றி

யாழ் கோட்டைக்குள் தான் சிப்பாய்கள் இருக்கின்றனர்.

வெளியே சுற்றி வளைத்து தீவிரவாதிகள் உள்ளனர்.

பலாலி முகாமினுள் தான் சிப்பாய்கள் இருக்கின்றனர்.

வெளியே தீவிரவாதிகள் சுற்றி வளைத்து நிற்கின்றனர்.

கோட்டையில் இருந்து பலாலிக்கு ஆகாய மூலம்தான் சிப்பாய்கள் செல்கின்றனர். கொழும்புப் பயணமும் அப்படியே.

முகாம்களில் உள்ளவர்களுக்கு உணவு, தண்ணீர் விநியோகமும் ஆகாய மார்க்கமாகத் தான் நடக்கின்றது.

லீவு எடுக்கும் சிப்பாய்கள் ஆகாய மார்க்கமாகத்தான் கொழும்பு வருகின்றனர்.

மோதலில் இறப்பவர்களின் சடலங்கள், காயமடைந்தவர்களை ஏற்றி

(4 ஆம் பக்கம் பார்க்க)



### பொய்யாமொழி

குறள்:

எனைவகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறுகும் மாந்தர் பலர்.

பொருள்:

எவ்வகையால் ஆராய்ந்து தெளிந்த பிற ... அச்செயல்வகையால் வேறுபடும் மக்கள் உலகத்தில் பலர் உண்டு.

---

### சமய நிகழ்வுகளில்

### தேர்த் திருவிழா

திருநெல்வேலி, ஜூலை 28

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற இருக்கின்றது.

காலை 7-30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 9-00மணிக்கு தேர்த்திருவிழாவும் இடம்பெறும். (இ-143)

★ ★

திருநெல்வேலி காயாரோகணேஸ்வரர் நீலாயதாட்சி அம்மன் தேர்த் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற இருக்கின்றது.

காலை 7 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் 8 மணிக்கு தேர்த் திருவிழாவும் இடம் பெறும். (இ-143)

### பொங்கல் உற்சவம்

மண்டைதீவு, ஜூலை 28

மண்டைதீவு வீரபத்திரர் ஆலயத்தில் ஆனி உத்தர பொங்கல் உற்சவம் சிறப்பாக நடைபெற்றது.

உற்சவத்தையொட்டி சமய சொற்பொழிவுகள் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றன. (இ-88)

### மகோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 28

சுளிபுரம் பறளாய் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் நாளை 29 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தேர்த்திருவிழா ஆகஸ்ட் 8 ஆம் திகதி சனிக்கிழமையும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும்.

### நிவாரண உதவி

யாழ் பல்கலைக் கழக மாணவர்கள் சேகரித்த உடுபுடைவைகள் தென்மராட்சிப் பகுதி முகாம்களிலும் வீடுகளிலும் தங்கியுள்ள அகதிகளுக்கு மக்கள் ஒன்றியத்தின் உதவியுடன் வழங்கப்பட்டன. (இ-31)

# நயினை நாகபூஷணி ஆடிப்பூர விழா நாளை

எனக்கென்றோர் தனிவரம் யான் கேட்கவில்லை
என் இனத்தார் வாழ்வொன்றே கருதவில்லை
உனக்கெல்லா உயிருமே சொந்தமென்ற
உண்மையை யான் ஒருபோதும் மறந்ததில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்குந் தியர் தாமும்
சிலமுற வேண்டுமென்றே வேண்டுகிறேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே! இந்த
தாரணியில் சாந்தியையே தருவாய் நீயே!!

ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில சரித்திரப் பிரசித்தி பெற்றது. இலங்கையில் உள்ள சக்தி ஆலயங்களுள் இவ்வாலயமே மிகவும் புராதனமானது. நாகவழிபாட்டின் தொன்மைக்கு மூலமாக விளங்கும் இவ்வாலயம் நாகேஸ்வரி வழிபாட்டின் பழைமையையும் பறைசாற்றி நிற்கின்றது. இவள் தனுகத் தோன்றிய தத்துவ நாயகி எனலாம்.

இந்தியாவில் நாகவழிபாடும் தேவி வழிபாடும் இணைந்து காணப்படுவது புராதன சமயப் பண்புகளில் ஒன்றாகும். இந்த இணைவின் அடிப்படையிலேயே கிழக்கு இந்தியாவில் மனஸா தேவி வழிபாட்டு நெறி மலர்ந்தது. இப்படியான நாக-ஈஸ்வரி வழிபாடுகளின் சங்கமத்திலேயே நயினையில் நாகேஸ்வரி— நாகபூஷணி வழிபாடு தோன்றிற்றெனலாம். எனவே மணித்தீவு எனப்படும் மணி பல்லவத்தில் மனஸா தேவியாக இவள் வழிபாடு நடைபெற்று வருகின்றது. மனஸா தேவியின் மறுபெயர்களாக நாகேஸ்வரி, நாகபூஷணி, நாகசயனி, நாகவாகினி, நாகாபரண பூஷிதா முதலியவற்றைத் தேவி பாகவதம் குறிப்பிடுகின்றது.

இவளது வழிபாட்டிற்கு ஆடிமாதமே சிறந்ததும் உகந்ததுமென்பது தேவிபாகவதத்தில் வரும் குறிப்பாகும்.

ஆடி மாதத்தில் பூர நட்சத்திரத்தில் பார்வதி தேவியை வழிபடுவதே ஆடிப்பூரத் திருவிழாவாகும். பார்வதிதேவி பூர நட்சத்திரத்தில் பிறந்தவளென்றும்; பூரணத்துவம் பெற்ற நாள் இப்பூரநட்சத்திர நாளே என்றும் இத்தினத்தை சிறப்பாக கொண்டாடுகின்றார்கள். சக்தி ஆலயங்களில் மட்டுமன்றி சக்தி சமேத சிவாலயங்களிலும் இவ்விழா சிறப்பாக நடைபெற்று வருகின்றது. பூரநட்சத்திரமானது அசுவினி முதலாக எண்ணப்படும் இருபத்தேழு நட்சத்திரக் கூட்டங்களில் பதினொராம் கூட்டமாகவுள்ளது சிம்மராசியில் இருக்கிறது. தேவிக்கு ஆஸனமும், வாகனமும் சிங்கமென்று புராணங்களிலும் குறிப்புகள் உள்ளன.

வெற்றிக்கும் வீரத்திற்கும் வித்தாக விளங்கும் தேவிக்கு ருதுசாந்தி பூப்புப் புனித விழா என்ற கருத்தில் ஆடிப்பூரவிழா நடைபெறுகின்றது இது சக்தி வழிபாட்டின் புராதன செழிப்பு— இனவிருத்தி என்பவற்றோடு தொடர்புடையதாயிருக்கலாம்.

அருணகிரிநாதர், அபிராமிபட்டர் போன்ற அருளாளர்களால் தோத்திரம் செய்யப்பட்ட அன்னபூரணியாகிய நயினை நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் ஆடிப்பூரத்தினத்தன்று அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

தேவர்கள் துயர் துடைக்க சிவபெருமான் நஞ்சுண்டமை புராணங்களில் வரும் செய்தியாகும். ஆனால் உமை நஞ்சுண்டு கண்டம் கறுத்த செய்தி சிலப்பதிகாரத்தில் உண்டு. இந்த வகையில் தன் உடைமைகளைச் சரியாக்குவதன் மூலம் நயினை மக்களுக்கு வரவிருந்த பிரபத்தைக் காப்பாற்றிவிட்ட ஸ்ரீமாதாவே நாகபூஷணி அம்மன் என இறைஞ்சுவோமாக. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Niru Tuition Centre**
Kondavil.
88- சேதன இரசாயனம்
89- பொது இரசாயனம்
ஆசிரியர்:- திரு செல்வா B Sc (Hons)
சனி, ஞாயிறு 8-00 — 9-00
செவ்வாய் 3-15

# உதயன்

28 07-1987 செவ்வாய்க்கிழமை

**Niru Tuition Centre**
Kondavil.
A/L 89 ஒளியியல்
88 வெப்பவியல்
ஆசிரியர்:- திரு. சௌந்தி B Sc (Hons)
சனி, ஞாயிறு 9-00 — 10-00
செவ்வாய் 3-15

தான் ஆட்சிக்கு வந்தவுடன்

## ஒப்பந்தத்தைக் கிழித்தெறிவாராம்!

### அநுரா கூறுகின்றார்

கொழும்பு, ஜூலை 28
பிரதமர் ராஜீவ் காந்தி செய்யும் ஒப்பந்தம் எதுவும் நிறைவேற்றப்படுவது இல்லை அவை போன்று இலங்கையுடன் செய்யும் ஒப்பந்தத்தையும் நாம் ஆட்சிக்கு வந்ததும் கிழித்தெறிய வைப்போம்.

— எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயக்கா முன்கண்டவாறு தெரிவித்தார்.

நுவரெலியாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் திரு. அனுரா பண்டாரநாயக்கா இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் சொன்னதாவது:-

வடக்கு, கிழக்கு இணைப்பினால் நாட்டிற்குப் பல அபாயங்கள் ஏற்பட உள்ளன.

முதலில் வடக்கு, கிழக்கைத் தமிழ்த் தீவிரவாதிகள் பிடிப்பர்.

பின்னர் நுவரெலியா, இரத்தினபுரி மற்றும் மலைநாட்டுப் பகுதிகளைப் பிடிப்பர்

இதற்கு சிங்கள மக்கள் அனுமதி வழங்கலாமா?

—இப்படி அனுரா கேட்டார். (உ-எ)

## தனி மாகாணசபை முஸ்லிம்களுக்கு வழங்க முடியாது!

### ஜனாதிபதி தெரிவித்தார்

கொழும்பு, ஜூலை28
முஸ்லிம்களுக்கு கிழக்கில் தனி மாகாணசபை அமைப்பது சாத்தியம் அற்றது.

- இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தன தெரிவித்தார்.

தன்னைச் சந்தித்துப் பேசிய இலங்கை முஸ்லிம் கௌன்ஸில் தூதுக் குழுவிடம் ஜனாதிபதிஇதனைத் தெரிவித்தார்.

இத்தூதுக் குழுவுக்குக் கவுன்ஸில் தலைவர் டாக்டர் பதியுதீன் மஹ்மூத் தலைமை வகித்தார்.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் 33 சத வீதமாக உள்ளனர் இணைப்பு வந்தால் அது 13சத வீதமாகக் குறையும்.

இதனால் கிழக்கு மாகாண முஸ்லிம்கள் பெரிதும் பாதிக்கப்படுவர். ஆகவே முஸ்லிம்களுக்குத் தனிமாகாண சபையே தேவை.

—இவ்வாறு தூதுக் குழு ஜனாதிபதியிடம் தெரிவித்தது.

ஜனாதிபதிபதிலளிக்கையில் -

தற்சமயம் முன்வைக்கப்பட்டுள்ள புதிய யோசனையில் எவ்வித மாற்றமும் செய்யப்படமாட்டாது.

ஆனால்கிழக்குமாகாண முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்குத் தகுந்த பாதுகாப்பும் உறுதியும் சட்டபூர்வமாக வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

### பிரபாகரனின் வாளே---

(3-ம்பக்கத் தொடர்ச்சி)
வர ஆகாய வழியைத் தான் பாவிக்கின்றனர்.

**கியூ**

ஆகாய வழியாக வருவதற்கு யாழ். முகாம்களில் படையினர் கியூவில் நிற்கின்றனர்.

இந்த நிலையில் சாம் ஏவுகணைக்குஒரு ஹெலிக்கொப்டர் சிக்கி சிதறினால் என்ன நிலை ஏற்படும்? சிந்தித்துப்பாருங்கள்.

ஹெலிக்கொப்டர் ஒன்று தாக்கப்பட்ட பின்னர் எம்மால் வடபகுதியில் பணியாற்ற முடியாது இப்படி அங்குள்ள இராணுவ அதிகாரிகள் தெரிவித்துவிட்டனர்.

இப்படிக் கூறுவதைத் தவிர வேறு எவ்வழியால் அவர்கள் தங்கள் உயிர்களைக் காப்பாற்ற முடியும்?

அந்த நிலை ஏற்பட்டால் எங்களின் யாழ். யுத்தம் முடிவடைந்து விடும்.

**ராஜீவ் உத்தரவாதம்**

இவை எல்லாவற்றையும் கருத்திற் கொண்டு தான் புதிய யோசனைகளைக் கொண்டு வந்துள்ளேன்.

இது சம்பந்தமான உடன்பாட்டுக்கு உத்தரவாதம் தருபவர் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி; தமிழ்நாடு அரசு அல்ல

இணைப்பு புதிது அல்ல. நாடு முன்னர்ராஜரட்ட, மாயரட்ட, றுகுணரட்ட என்று மூன்றாகத்தான் பிரிக்கப்படடிருந்தது.

பிரிட்டிஷார்தான் எல்லாவற்றையும் இணைத்து ஐந்து மாகாணங்களாக்கினர்.

**நானே ஜனாதிபதி**

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடந்து யு. என். பிக்கு ஓர் ஆசனம் கூட கிடைக்காவிட்டாலும் 1988 வரை நானே ஜனாதிபதி. இதை அம்மையார் தெரிந்து கொள்ளட்டும்.

கடைசிநாள்வரை பதவியில் இருப்பேன். நாட்டின் நலன்கருதி தீர்மானம் எடுக்க நான் பயப்படப்போவதில்லை. நாட்டின் முன்னேற்றத்தையே நான் பார்க்கின்றேன்.

முட்டாள் தனமான பேச்சுக்கள் குறித்து பயப்படக்கூடாது.

தீவிரவாதம் இருக்கும் வரை நாடுமுன்னேறாது.

அத்தீவிரவாதம் புதனுடன் முடிந்துவிடும். அதை முடிக்க உங்கள் ஆதரவு தேவை.

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் ஆளுநர் பதவியைப் பெற்றுக் கொள்ள விருப்பமுள்ளவர்கள் விண்ணப்பங்களை என்னிடம் சமர்ப்பிக்கலாம்.

ஐ. தே. கட்சியின் அடுத்த நிறைவேற்றுக் குழுக் கூட்டம் யாழ்ப்பாணம் அல்லது திருமலை அல்லது வல்வெட்டித்துறை அல்லது பருத்தித்துறையில் நடைபெறும் என்று நான் நம்புகின்றேன்.

இப்படி ஜனாதிபதி கூறினார். (இ-எ)

## சீமெந்து ஊழியருக்கு சம்பளம்

யாழ்ப்பாணம், ஜூலை 28
காங்கேசன் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்களுக்கான சம்பளக் காசோலை சுன்னாகம் லயன்ஸ் சமூக மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

இன்றும் காலை 9 மணி முதல் காசோலைகள் வழங்கப்படும்.

— இவ்வாறு தொழிற்சாலையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (உ-7)

## நிலாவெளியில் இரு தமிழர் சுட்டுக் கொலை

திருகோணமலை, ஜூலை28
நிலாவெளி ஆறும் கட்டை அருகில் இரண்டு தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

எம். தங்கவேலு (வயது 41), எஸ். யோகராசா (வயது 32) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள்.

சீருடையில் சென்றவர்கள் வீட்டில் இருந்த இருவரையும் வெளியே அழைத்தனராம்.

வெளியே சென்றபோது இருவர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாம்.

இராணுவ முகாம் அருகில் இச்சம்பவம் கடந்த 22ஆம் திகதி இடம்பெற்றது (உ-எ-150)

### அரசின்---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
அம்பாறை கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாவட்டம். டிச.19 யோசனைகளின் பிரகாரம் அது கிழக்கு மாகாணத்திருலிந்து பிரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் புதிய யோசனைகளின் பிரகாரம் அம்பாறை மாவட்டமும் கிழக்கு மாகாணத்திற்குள் அடங்கும். வடக்கும் கிழக்கும், இணைக்கப்படும் எனவும் புதிய யோசனை தெரிவிக்கிறது.

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் (41.5 சத வீதம்) சிங்களவர், (37.6 சத வீதம் தமிழர்கள் (20.5 சத வீதம்) ஆகிய மூன்று இனத்தாரும் வாழ்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ)

### ராஜீவின்---

(1 ம பக்கத் தொடர்ச்சி)
பகல் அவர் நாடு திரும்புவார்.

-இப்படி மத்திய அரசு அறிக்கை ஒன்று தெரிவித்தது.

இதேவேளை பிரதமர் ராஜீவ் காந்தி திட்டமிட்டபடி நாளை (புதன் கிழமை) கொழும்பு வருவார் என்றும்–

அதற்கான ஏற்பாடுகளைத் தொடர்ந்து செய்யும் படியும் கொழும்பு திரும்பிய இந்தியத் தூதர் டிக்ஸிற் ஜனாதிபதியிடம் தெரிவித்தார். (உ-எ)

### மகா---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
பெற முயல்கின்றனர்,

எப்படியாயினும் நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து எதிர்ப்பைக் கைவிட மாட்டேன்

எமது எதிர்ப்பு இயக்கம் பௌத்த மதவிதிகளின்படி நடத்தப்படும்

— இப்படி அஸ்கிரிய மகாநாயக்க தேரர் சொன்னார். (உ-எ)

ராஜீவின் உத்தேச விஜயம்

## பொலிஸ் நிலையங்கள் உஷார் நிலையில்!

கொழும்பு, ஜூலை 28
பிரதமர் ராஜீவ்காந்தியின் உத்தேசிக்கப்பட்ட புதன்கிழமை விஜயத்தை முன்னிட்டு நாடெங்கிலும் உள்ள பொலிஸ் நிலையங்கள் அனைத்தும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

பொலிஸ்மா அதிபர் சிறில் ஹேரத் இதனைத் தெரிவித்தார். என்று 'டெய்லி நியூஸ்' செய்தி வெளியிட்டிருக்கின்றது.

விசேட கட்டுப்பாட்டு அறை ஒன்று கொழும்பு பொலிஸ் தகவல் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர்இதற்குப்பொறுப்பாக இருக்கின்றார்.

தீவிரவாத, கிரிமினல் சக்திகளின் நடமாட்டம் குறித்து தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி மாவட்ட பொலிஸ் அதிபர்களை பொலிஸ்மா அதிபர் பணித்திருக்கின்றார்.

கொழும்புக்கு வரும் போகும் வாகனங்கள் தீவிரமாக சோதனை செய்யப்பட்டு வருகின்றன.

கொழும்பு மாநகரில் விசேட அதிரடிப் பொலீஸார் படை, கலகம் அடக்கும் படை ஆகியன உஷார் நிலையல் வைக்கப்பட்டுள்ளன.

பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரமாக்கப்பட்டுளளன.

அதன் விவரங்களை வெளியிட முடியாது என்று பொலீஸ்மா அதிபர் சொன்னார்

பொலீஸாருக்கு உதவ இராணுவமும் உஷார் படுத்தப்பட்டுள்ளது.

## இரணைதீவில் போலியோ நோய்

### அதிக குழந்தைகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 28
இரணைதீவு, நாச்சிக்குடா பகுதிகளில் தற்பொழுது போலியோ நோய் அதிகரித்து வருகிறது.

இந்த நோயினால் பீடிக்கப்பட்டிருந்த குழந்தை ஒன்றும் பலியாகி உள்ளது.

மேலும் பத்துக் குழந்தைகள் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நந்தகுமாரன் சூரியகுமாரன் என்ற ஒன்றரை வயதுக் குழந்தையே இந்நோயினால் அண்மையில் உயிரிழந்தது.

இக் குழந்தையின் சகோதரரும் இந் நோயினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்.

குழந்தைகள் பிறந்து மூன்று மாதம், ஐந்து மாதம், ஏழு மாதம் ஆகிய காலங்களில் போலியோ தடுப்பூசி போடப்பட வேண்டியது கட்டாயமாகும். (உ-10)

### பேச்சு ----

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
மக்களின் ஏகோபித்த பிரதிநிதியாக எமது தலைவர் வே. பிரபாகரன் அழைக்கப் பட்டுள்ளார். இப்பேச்சுக்களின் போது தலைவர் மீதும், எம் மக்களின் மீதும் - ,தமிழ் மக்களின் அபிலாசைகளை மதிக்காத, அவர்களின் சுதந்திரமான வாழ்வை உறுதிப்படுத்தாத எந்தத் தீர்வும் திணிக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம்.

எங்கள் பிரச்சனைகளுக் குத் தீர்வு காண நாம் நடாத்துகின்ற எமது போராட்டத்தில் எல்லோரது மனிதாபிமான ஒத்துழைப்புக்களையும், உதவிகளையுமே வரவேற்கின்றோம் ஆனால் அடுத்தவர்களின் நலன்களுக்காக எமது போராட்டம் பயன்படுத்தப் படுவதை உறுதியாக நிராகரிக்கின்றோம்.

நாளைய சந்ததியினரின் நல் வாழ்வுக்காக சிந்தப்பட்ட இரத்தத்தையும் வியர்வையையும் அடுத்தவர்கள் பயன்படுத்திச் சீரழிப்பதை எம்மால் அனுமதிக்க முடியாது.

இதே வேளை தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட - பதவி மோகங்கொண்ட- சில தீய சக்திகள் தமது சொந்த லாபங்களுக்காக எம்மக்களைக் காட்டிக் கொடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

இவ்வாறான போலிகளையும், அர்த்த மற்ற தீர்வுகளையும், நிராகரித்து தமிழீழ மக்களின் நிரந்தர விடிவுக்கான எமது இறுதி இலட்சியத்தை அடையும் வரை உறுதியுடன் போராடுவோம். (உ)

### திடீரென மரணம்

ஆரியகுளம் சந்தியில் உள்ள கடை ஒன்றில் தேநீர் அருந்திக்கொண்டிருந்த நபர் ஒருவர் திடீரென மரணமானார்.

இவரது சடலம் உறவினர்கள் வருகைக்காக தற்போது யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கபபட்டுள்ளது.

இவரது அடையாளக் கார்ட்டில் ஐயம்பிள்ளை மாரிமுத்து (வயது 45) புங்குடுதீவு எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது

### ஆறுமாத---

(1ம் பக்கத் தொடர்ச்சி)
உள்ள இணைப்பு குறித்து பிரதமர் தனது பலமான ஆட்சேபனையை அமைச்சரவைக் கூட்டத்தில் தெரிவித்தார்.

பெரும்பாலான அமைச்சர்கள் உடன்பாடு விஷயத்தில் சுதந்திரமாக நடந்துகொள்ள ஜனாதிபதிக்கு உரிமை வழங்கினர்.

பி. பி. சி. வானொலி மேலும் இப்படித் தெரிவித்தது (உ-எ)

### தமிழ---

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
உடன்பாடு சரிவர அமுல் நடத்தப்படும் போதுஅதன் நன்மையை தமிழர் அமைப்புக்கள் பாராட்டுவர் என்று புதுடில்லி அரசு வட்டாரங்கள் தெரிவித்தன – இப்படி புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-எ)

## சாரணருக்கான பயிற்சிநெறி

வட்டுக்கோட்டை, ஜூலை 28
காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச்சங்கம் நடத்தும் அறுவர் தலைவர் பயிற்சி நாளை புதன் கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை சில்லாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நடைபெறும். காங்கேசன்துறை மாவட்டச் சாரணர் கிளைச்சங்கத்தினால் இது நடத்தப்படுகிறது. பயிற்சிநெறி மாவட்ட ஆணையாளர் திரு. நா. போஜன் தலைமையில் நடைபெறும். (இ-161)

## ஊரடங்கு உத்தரவு

ஆறாவது நாளாக யாழ்குடா நாட்டில் நேற்றும் இரவு 7 மணி முதல் இன்று அதிகாலை 5 மணிவரை பத்துமணி நேர ஊரடங்கு அமுல் செய்யப்பட்டிருப்பதாக யாழ் - வானொலி அறிவித்தது. (உ-ரி)

### ஆயுதங்களை ---

(1-ம் பக்கத்தொடர்ச்சி)
டார்கள்

இராணுவம் தாக்கினால் புலிகள் பதில் நடவடிக்கையில் ஈடுபடுவர்.

இப்படி புலிகள் பேச்சாளர் மேலும் தெரிவித்தார் என்று பி பி.சி புதுடில்லிச் செய்தியாளர் கூல்றிஜ் நேற்று இரவு அறிவித்தார்.

### நாடாளுமன்ற...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
தெரிவிக்கப்பட்டது

மிக அவசரமாக சமாதான ஒப்பந்தம் காணும் நடவடிக்கையில் இந்தியா ஈடுபடுள்ளதாகவும் ஈரோஸ் சங்கர் மேலும் தெரிவித்தார் என்று பி. பி. சி. அறிவித்தது. (உ-எ)

### பல தமிழர்----

(1-ம்பக்கத் தொடர்ச்சி)
பதிலளித்திருப்பதாகவும்–

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இந்திய அதிகாரிகள் தொடர்ந்து பேச்சு நடத்தி வருவதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

வெளியுறவுச் செயலாளர் கே பி எஸ் மேனன் தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈரோஸ் ஆகியவற்றின் தலைவர்களுடன் தனித்தனியே பேச்சுக்கள் நடத்தினார்.

பின்னர் புளொட், ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ ஆகியவற்றின் தலைவர்களுடன் கூட்டாகப் பேச்சுக்கள் நடத்தினார்.

## 1,000 பிக்குமார் கூடி மிரட்டல்!

கொழும்பு, ஜூலை 28
இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் இலங்கை விஜயத்தையும் - புதிய யோசனைகளையும் எதிர்ப்பது எனக் கொழும்பில் சுமார் ஆயிரம் பிக்குமார் கூடி முடிவு செய்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

புதிய யோசனைகளை ஆட்சேபித்து சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக அவர்கள் அறிவித்திருக்கின்றனர்.

ராஜீவ் காந்தியின் விஜயத்தின்போது நாட்டின் சகல பாகங்களிலும் உள்ள வீடுகள் மற்றும் பொது இடங்கள், கட்டடங்கள் ஆகியவற்றில் கறுப்புக்கொடியைப் பறக்கவிட்டுத் தமது எதிர்ப்பைத் தெரிவிக்குமாறு பொதுமக்களை அவர்கள் கோரியிருக்கின்றனர். (உ)

## அதிகாரங்கள் குறித்து 6 வாரங்களில் முடிவு

கொழும்பு, ஜூலை 28
ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட அடுத்த ஆறு வார காலத்தினுள் மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் என்ன என்பது பேச்சுவார்த்தைகள் நடத்தி தீர்மானிக்கப்பட வேண்டும்.

இது சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் டிச 19 யோசனைகளின் அடிப்படையில் அமையும்.

நாளை பிரதமர் காந்தி —ஜனாதிபதி ஜயவர்த்தன கைச்சாத்திடப்படவுள்ள உடன்பாட்டில் இந்த அம்சமும் இடம் பெறுகின்றது. (உ-எ)

## மக்கள் அனுமதியின்றி இணைப்பை ஏற்படுத்தாதீர்!

### வழக்கறிஞர் சங்கம் கோருகிறது

கொழும்பு, ஜூலை 28
மக்களின் அனுமதியின்றி வடக்கு - கிழக்கு இணைந்த தனி மாநில அமைப்பை ஏற்படுத்தும் உடன்பாடு எதையும் இந்தியாவுடனோ அல்லது வேறு அரசியல் குழுக்களுடனோ செய்து கொள்ள வேண்டாம் என்று அரசாங்கத்தை இலங்கை வழக்கறிஞர் சங்கம் கோரியுள்ளது.

கடந்த சனிக்கிழமை சங்கத்தின் கூட்டம் நடந்தது.

அப்போது இப்பிரேரணை பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

இப்பிரேரணையை திரு. ஏ. ஸி குணரத்தின கியூ. ஸி. கொண்டுவந்தார். திரு. காமினி ஈரியகொலை ஆமோதித்தார்.

உள்நாட்டுப் பிரச்சினை ஒன்றுக்குத் தீர்வுகாண வெளியார் ஒருவர் இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது இதுவே முதல் தடவை— இப்படி திரு. காமினி ஈரியகொலை பேசுகையில் சொன்னார்.

திரு. கே. நீலகண்டன் பிரேரணையை எதிர்த்தார். பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளாமல் ஒத்திவைக்கவேண்டும் என்று அவர் திருத்தம் கொண்டு வந்தார். அது தோற்கடிக்கப்பட்டது.

## மூவருக்கு மின்கம்பத் தண்டனை

வவுனியா, ஜூலை28
வவுனியா-மன்னார் வீதி இரண்டாம்கட்டைப் பகுதியில் மூன்று மின்கம்ப சடலங்கள் ஞாயிற்றுக்கிழமை மாலை கண்டு பிடிக்கப்பட்டன.

மரண தண்டனை வழங்கப்பட்டதற்கான அறிவித்தல் அட்டைகளும் சடலங்களின் கழுத்தில் காணப்பட்டன. மூன்று சடலங்களும் திங்கட்கிழமை வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்டு சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளன. (உ-164)

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு
★ உதயன் ★
உங்களுக்கு உவந்தளிக்கும்
அதிர்ஷ்டப் பயணம்
(விவரம் நாளைய உதயனில்)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிடெட் [illegible] 393/3, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 28-07-1987.
P ted and Published by New Uthayan Publi ions (Pvt) Ltd at 393/3 Navalar Road Jaffna on Tuesday July 28, 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org